# “ஜெய் நகர்” ஓர் வரலாறு

*...... N.சிட்டிபாபு ......*

' **ஜெய் நகர்** ' இது சென்னை மாநகர் அரும்பாக்கத்தில் உள்ள நமது பகுதியின் இன்றைய முகவரி.

1960ம் ஆண்டு முதல் இந்த பகுதி ஜெகன்னாத நகர் என்றும் துரைபிள்ளை நகர் என்றும் இரண்டு வரையறுக்கப்பட்ட பகுதிகளாக இயங்கி வந்துள்ளது.

இன்றைய வள்ளுவர் சாலை முதல், 13வது தெரு வரையிலான பகுதி ஜெகன்னாத நகர் எனவும், 12வது / 20வது தெரு [அன்றைய கெனால் சாலை (Canal Road)] முதல் 7வது தெரு மற்றும் அருள்மிகு ஆதிபராசக்தி அம்மன் கோவில் வரையிலான பகுதி துரைபிள்ளை நகர் எனவும் அழைக்கப்பட்டு வந்தது.

வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் இருந்த கோயம்பேடு ஊராட்சியின் எல்லைக்குட்பட்ட பகுதியாகவே ஜெகன்னாத நகர் மற்றும் துரைபிள்ளை நகர்-கள் இருந்தன.

ஜெகன்னாத நகர் முதல் மெயின் ரோடு, சுந்தர வினாயகர் கோவில் தெரு, வள்ளுவர் தெரு, வ.வு.சி. தெரு (இன்றைய 16வது தெரு), அண்ணா தெரு (இன்றைய 14வது தெரு) பாரதி தெரு (இன்றைய 13வது தெரு), இராஜாஜி தெரு (இன்றைய 21வது தெரு) என்று ஒரு சில தெருக்கள்தான் பெயர்களுடன் அழைக்கப்பட்டன. மற்ற வீடுகளுக்கு, பிளாட் நம்பர் மட்டுமே. இந்த பகுதியில் 1960களிலும் 1970களின் முற்பகுதியிலும் குடியேறியவர்களின் நாட்டுப் பற்றின் வெளிப்பாடாக இந்த பெயர்கள் சூட்டப்பட்டிருந்தன.

மின் வசதியை தவிற சாலை வசதி, சாக்கடை வசதி, குடிநீர் வசதி போன்ற எந்த அடிப்படை வசதிகளற்ற பகுதியாகத் தான் நம் பகுதி அன்று விளங்கிவந்தது. பொழுதுப் போக்கிற்கு 'விஜயா திரையரங்கம்' என்ற ஒரு கீத்துக்கொட்டகை தற்போதைய 2வது தெருவின் பின்புறம் இலட்சிய நடிகை விஜயகுமாரியின் பெயரில் இயங்கி வந்தது.

துரைப்பிள்ளை நகர் பகுதி செங்கல் சூளை நிறைந்த பகுதியாதலால் பெரும் பள்ளங்கள் நிறைந்து, சாதாரண மழைக்கும் தண்ணீர் தேங்கும் பகுதியாக இருந்தது. பள்ளங்களில் தேங்கும் நீர் தவிற உபரி மழை நீர் முழுவதும். மிக விரைவாக "கெனால் ரோடு" வழியாக, அய்யாவு நாயுடு காலனி பின்புறம் செல்லும் விருகம்பாக்கம் கால்வாயில் விழுந்து கூவம் ஆற்றுக்கு சென்றுவிடும். எம்எம்டிஏ காலனி 1977ஆம் ஆண்டு வீட்டு வசதி துறையினால் முழுமையாக உருவாக தொடங்கிய பின்னர் மழை நீர் வெளியேறுவதில் அதிக சிரமம் ஏற்பட்டது. நம் பகுதி முழுவதும் மழை நீர் தேங்க துவங்கி விட்டது. வீதிகள் வெள்ளக்காடாயின.

இந்நிலையில் "கோயம்பேடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையமும்" முனைப்பாக செயல்பட துவங்கிய பிறகு நிலைமை மிகவும் மோசமடைய துவங்கி விட்டது. சுத்திகரிக்கப்பட்ட

கழிவு நீரை பயன்படுத்தி சுமார் 100 ஏக்கரில் தீவனப் புல் (Guinea grass) பண்ணை ஒன்று மாநகராட்சியால் அமைக்கப்பட்டிருந்தது. இன்றைய SAF Games Village, சிஎம்பிடி பஸ் நிலையம், நமது பகுதியின் தெற்கு எல்லை (தற்போது ஜெய் நகர் பூங்காக்கள் அமைந்துள்ள பகுதி) வரை பரந்து விரிந்து இந்த புல் பண்ணை அமைக்கப்பட்டிருந்தது. இது நாளடைவில் அதிக அளவில் கொசு உற்பத்தியாகி கொசுப் பண்ணையாக மாறிவிட்டது.

**சென்னை மாநகராட்சியுடன் இணைப்பு:**

2011ல் சென்னையை சுற்றியுள்ள 50 சதுர கி.மீ. பகுதியிலுள்ள 10 நகராட்சிகளை ஒருங்கிணைத்து இணைக்கப்பட்டு 200 கோட்டங்களாக இன்று சென்னை மாநகராட்சி விளங்குகிறது. இந்த விரிவாக்கத்தை நாம் அனைவரும் அறிவோம். இதே போன்று ஒரு விரிவாக்கம் 1976 - 1977லும் நடைபெற்றது. வில்லிவாக்கம், கோடம்பாக்கம், விருகம்பாக்கம், கோயம்பேடு உள்ளிட்ட ஊராட்சி பகுதிகளை மாநகராட்சியுடன் இணைத்து சென்னை மாநகராட்சியின் எல்லைகள் அன்று மறு நிர்ணயம் செய்யப்பட்டன. நமது பகுதியும் சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியாக 1977ல் தான் மாறியது. சென்னை மாநகராட்சியின் பகுதியாக மாற்றப்பட்டதே ஒழிய, உடனே எந்த வளர்ச்சிப் பணிகளும் நடைபெறவில்லை. நமது பகுதி வளர்ச்சியடையாத அடிப்படை வசதிகளற்ற ஒரு பின்தங்கிய பகுதியாகவே நீண்ட நாள் இருந்து வந்தது.

**குடியிருப்போர் நலச்சங்கம்:**

இந்த நிலைமையில் நமது பகுதியில் அடிப்படை வசதிகளை மாநகராட்சியிலிருந்து பெற்றிட அன்று சில நண்பர்கள் கூடி விவாதித்தோம். உடனடியாக ஒரு குடியிருப்போர் நலச்சங்கம் அமைக்க வேண்டும் என முடிவெடுத்தோம். முறைப்படி சட்டதிட்டங்களை (Bye-Laws) வகுத்து 1980ல் "ஜகன்னாத நகர் துரைப்பிள்ளை நகர் குடியிருப்போர் நலச் சங்கம்" "Jagannatha Nagar & Duraipillai Nagar Residents' Welfare Association" என பதிவு செய்யப்பட்டது. திரு S.ரெங்கநாதன்-தலைவர், திரு தக்ஷினாமூர்த்தி-துணைத் தலைவர், திரு N.சிட்டிபாபு-செயலாளர், திரு V.சந்தானம்-பொருளாளர், கமிட்டி உறுப்பினர்களாக திரு P.சேஷாத்ரி, திரு M.பாலசுப்ரமணியம், திரு I.ஜேசுராஜ், திரு சவரிமுத்து, திரு J.வரதராஜன் ஆகியோரை கொண்டு ஓர் நிர்வாகக் குழுவும் அமைக்கப்பட்டது. சங்கத்தின் நிர்வாகக்குழு கூட்டங்கள் திரு S.ரெங்கநாதனின் வீட்டில் அல்லது திரு V.சந்தானம் திரு M.பாலசுப்ரமணியம் திரு P.சேஷாத்ரி திரு I.ஜேசுராஜ் ஆகியோரது வீடுகளில் நடைபெறும். சங்கத்தின் பொதுக்குழுக் கூட்டங்கள் அன்று வெட்ட வெளியில் அமைந்திருந்த அருள்மிகு சுந்தர வினாயகர் கோவில் திறந்தவெளியில் நடைபெற்றன.

சங்கத்தின் சார்பில் மாநகராட்சி அதிகாரிகளை சந்தித்த போது, 'ஜகன்னாத நகர் துரைப்பிள்ளை நகர்' சம்பந்தப்பட்ட எந்த தஸ்தாவேஜுகளும் வில்லிவாக்கம் ஒன்றியத்தில்

இருந்தோ அல்லது கோயம்பேடு ஊராட்சி நிர்வாகத்திடமிருந்தோ சென்னை மாநகராட்சி நிர்வாகத்திற்கு முழுமையாக கிடைக்கப்பெற வில்லை. எந்த தஸ்தாவேஜுகளும் இல்லாமல் 'ஜகன்னாத நகர் துரைப்பிள்ளை நகர்' பகுதியில், மாநகராட்சி வரையறுத்துள்ள மேம்பாட்டு கட்டணங்கள் (development charges) வசூலிக்காமல் சாலை, கழிவுநீர் கால்வாய்கள், தெரு விளக்குகள் உள்ளிட்ட எந்த அடிப்படை வசதிகளும் செய்து தர இயலாது என்று திட்டவட்டமாக கூறிவிட்டார்கள். மாநகராட்சி ஆணையரை பலமுறை சந்தித்தும் பலன் ஏதும் கிடைக்கவில்லை. தாலூக்கா அலுவலகம், கோயம்பேடு ஊராட்சி தலைவர் திரு ராமன், ஊராட்சி அலுவலக பொருப்பாளராக பணியாற்றியவரின் வீடு, வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் என்று பல இடங்களில் அலைந்தாலும் எந்த தஸ்தாவேஜும் கிடைக்கவில்லை. இறுதியாக, வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் அனுமதி பெற்று சில விடுமுறை நாட்களில் ஒன்றிய அலுவலக பதிவறைகளில் இருந்த பழைய கோப்புகளில் தேடினோம். திரு S.ரெங்கநாதன் அவர்கள் அன்று வேளாண்மை விரிவாக்க அதிகாரியாக வில்லிவாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் பணியாற்றி வந்தார். அவ்வாறு தேடியதில் அரும்பாக்கம் ஜகன்னாத நகர் பகுதியில் சில தெருக்களில் செம்மண் சாலைகள் போடப்பட்டு பராமரிக்கப்பட்டதாக சில தஸ்தாவேஜுகள் கிடைத்தன. அதிலும் துரைப்பிள்ளை நகர் சம்பந்தப்பட்ட எந்த பதிவேடும் கிடைக்கவில்லை. கோயம்பேடு ஊராட்சியின் வைப்புத் தொகை சுமார் ரூ.90,000/- சென்னை மாநகராட்சிக்கு மாற்றப்பட்ட நல்ல தகவலும் கிடைத்தன.

**"ஜெய் நகர்"**

இந்த தஸ்தாவேஜுகள் அனைத்தும் மாநகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டன. ஆனால், அதன் அடிப்படையில் ஜகன்னாத நகர் பகுதிக்கு மட்டும் தான் அடிப்படை வசதிகள் செய்து தருவார்கள், துரைப்பிள்ளை நகர் பகுதியை அப்படியே புறக்கணித்து விடுவார்கள் என்று ஐயம் ஏற்பட்டது. அன்றைய காலகட்டத்தில் அரும்பாக்கத்தில் ஜகன்னாத நகர் வள்ளுவர் சாலையை மையமாக கொண்டு இரண்டு பகுதிகளாக இருந்தது. மாநகராட்சி தனி அலுவலர் திரு C. ராமதாஸ், IAS அவர்கள், மாதாந்திர குறை தீர்க்கும் கூட்டத்தில் ஒரு முறை இதை தெளிவு படுத்தி நம் பக்கமுள்ள இந்த பகுதிக்கு மாற்று பெயர் சூட்ட அறிவுறுத்தினார். இது குறித்து நலச்சங்க நிர்வாகக்குழுவிலும் பொதுக்குழுவிலும் விவாதித்தோம். 'ஜகன்னாத நகர் மற்றும் துரைப்பிள்ளை நகர்' என்றிருக்கும் இரு பகுதிகளையும் இணைத்து ஒரே பகுதியாக பெயர் மாற்றம் செய்யலாம் என்று முடிவெடுத்தோம் ***Jagannatha Nagar And Duraipillai Nagar*** என்பதில் *Jagannatha Nagar*-ல் உள்ள **J**-வையும் *And*-ல் உள்ள **A**-வையும் *Duraipillai*-ல் உள்ள **i**-ஐயும் இணைத்து **JAI Nagar** என பெயரிடலாம் என்று ஏகமனதாக முடிவெடுக்கப்பட்டது. இதனை செயல்படுத்த சம்பந்தப்பட்ட அரசு துறைகளுக்கு முறைப்படி அறிக்கைகள் அனுப்பப்பட்டன

இவ்வாறு உறுவானது தான் இன்றைய "ஜெய் நகர்".

**தெருக்கள்-பெயர்கள்:**

இந்நிலையில் சில தெருக்களுக்கு மட்டும் பெயரிடப்பட்டிருந்த நிலையில் அனைத்து தெருக்களுக்கும் பெயர்கள் தெரிவு செய்வதில் உள்ள சிரமத்தை கணக்கில் கொண்டு பொதுக்குழு ஒப்புதலுடன் அனைத்து தெருக்களும் எண் வரிசையில் பெயர்கள் சூட்டப்பட்டன.

**வீடுகளுக்கு கதவிலக்கம்:**

சிறிய அளவில் அங்கொன்றும் இங்கொன்றுமாக தெருவுக்கு 2 முதல் 4 வீடுகள் என சுமார் 100 வீடுகள் மட்டும் இன்றைய ஜெய் நகரில் அன்று கட்டப்பட்டிருந்தன. இதில் மாடி கட்டிடங்கள் மிகவும் குறைவு. இவற்றிற்கு கதவிலக்கம் கொடுக்கப்படவில்லை. பிளாட் நம்பர் மட்டும் 51/B 75/C என அடுத்தடுத்த வீடுகளுக்கு கதவு எண்கள் முகவரியாக இருந்தன. இவற்றை மாற்றி ஒவ்வொரு தெருவிலும் கட்டியுள்ள வீடுகளுக்கும் அடுத்துள்ள காலி மனைகளையும் கணக்கெடுத்து முறைப்படி கதவிலக்கங்கள் தரப்பட்டன.

ஜெய் நகரின் வரைப்படங்கள் திரு N.லோகநாதன் (23வது தெரு) அவர்களால் வரையப்பட்டு இரண்டு பெரிய அளவு வரைப்பலகைகள் ஜெய் நகர் எல்லையில் வழிகாட்டியாக வைக்கப்பட்டன.

**சத்துணவு கூடம்:**

பல முயற்சிகளுக்கு பிறகு மாநகராட்சியில் சில கோப்புகள் நகர்ந்தன ஆனாலும் பலன் அவ்வளவு எளிதாக கிடைக்கவில்லை. 1982ல் மான்புமிகு தமிழக முதல்வர் திரு எம்.ஜி.ராமச்சந்திரன் அவர்கள் சத்துணவு திட்டத்தை அறிவித்து சத்துணவுகூடங்கள் மாநிலத்தில் அனைத்துப்பகுதிகளில் பரலாகவும், சென்னை மாநகராட்சியின் அனைத்து கோட்டங்களிலும் குறைந்தது ஒரு சத்துணவு கூடமாவது அமைக்க வேண்டும் என்று உத்தரவுகள் பிறப்பிக்கப் பட்டன.

அந்த பின்னணியில் மாநகராட்சியின் 76வது கோட்ட உதவி பொறியாளர் திரு விஸ்வநாதன் ஜெய் நகரில் ஒரு சத்துணவு கூடம் அமைக்க இடம் தேடி நம் நலச் சங்கத்தை அணுகினார். அவரது வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு தற்போது 'சமூகக்கூடம்' அமைந்துள்ள இடத்தில் மாநகராட்சியின் "சத்துணவுக்கூடம்" அமைத்துக்கொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதற்கு பிரதிபலனாக ஜெய் நகரில் தெருக்களில் சாலையை மேம்படுத்தி தார் சாலைகள் அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

**தெருக்கள், தெரு விளக்குகள்:**

அனைத்து தெருக்களில் முடியாவிட்டாலும் முதலில் இரண்டு பிரதான சாலைகளில் தார் சாலை போட்டுதருவதாகவும், தெரு விளக்குகள் அமைத்து தருவதாகவும் உறுதியளித்தார். மாநகராட்சியின் தலைமை பொறியாளர் திரு பிரசாத் அவர்களின் முழு ஆதரவுடன் ஜெய்

நகர் தெருக்கள் அனைத்தும் ஒளிமயமாக்கப்பட்டன. அது தான் மாநகராட்சி முதன் முதலில் ஜெய் நகரில் போட்டு கொடுத்த சாலையும், அமைத்துக் கொடுத்த தெரு விளக்குகளும். ஜெய் நகர் குடியிருப்போர் நலச் சங்கம் அமைக்கப்பட்டதன் பலனை அன்று தான் பகுதி மக்கள் மகிழ்சியுடன் உணர்ந்தார்கள். கொண்டாடினார்கள். படிப்படியாக சில தெருக்கள் மேம்படுத்தப்பட்டன; செம்மண் சாலைகள் அமைத்துக்கொடுக்கப்பட்டன.

**கொசு தொல்லை:**

மாநகராட்சி புல் பண்ணையின் கழிவுநீர் தேக்கம் அதிகரிக்க அதிகரிக்க கொசு தொல்லையும் அதிகரித்து விட்டது. மாநகராட்சி சுகாதார அதிகாரிகளை வரவழைத்து கொசு உற்பத்தியை கட்டுப்படுத்த முயற்சிக்கப்பட்டது. ஜெய் நகர் எல்லையை ஒட்டியே இருந்த புல் பண்ணையை குறைந்தது 200 மீட்டருக்கு அப்பால் தள்ளிப்போட கேட்டுக்கொள்ளப்பட்டது. அன்று ஆணையராக இருந்த திருமதி சாந்தா ஷீலா நாயர் அவர்களையும் நேரடியாக வரவழைத்து முறையிட்டோம். வேண்டுகோளை ஏற்று புல் பண்ணையை ஜெய் நகர் எல்லையிலிருந்து தள்ளிபோட முடிவெடுக்கப்பட்டது. இப்போதுள்ள 100அடி சாலை மற்றும் SAF Games Village, CMBT பகுதிகளுக்கு தள்ளிபோடப்பட்டது.

100அடி சாலை அமைக்கப்பட்டது 1990ல் தான்! SAF Games Village கட்டப்பட்டது 1996ல் தான்! CMBT துவக்கப்பட்டது 2002ல் தான்!

**சென்னையில் வெள்ளம்:**

1984ல் ஏற்பட்டது ஒரு எதிர்பாராத அசம்பாவிதம்.

**1984 ஏப்ரல் மாதம். நல்ல வெயில் காலம்.** மழையின் அறிகுறியே இல்லாத காலம். ஆனால் ஜெய் நகரில் வெள்ளம். இது தான் 'தி ஹிந்து' *(The Hindu)* நாளிதழ் வெளியிட்ட செய்தி.

அதாவது, புல் பண்ணையில் பாய்ச்சப்பட்ட **கழிவு நீர்** அதிகரித்து, அதிகரித்து ஜெய் நகருக்குள் **வெள்ளமாக பாய்ந்து விட்டது.** நாளுக்கு நாள் நீர் வரத்து அதிகமாகி 21வது, 22வது, 23வது தெருக்களில் எல்லாம் முழங்காலுக்கு மேல் வந்து விட்டது. அமைச்சர் வரை முறையிட்டும் கழிவு நீரை வெளியேற்ற மெட்ரோ வாட்டர் நிர்வாகம் சீரான முயற்சிகள் எதையும் மேற்கொள்ளவில்லை. ஜெய் நகரில் பல குடிநீர் கிணறுகள் பாழாகி விட்டன. *'தி ஹிந்து'* நாளிதழில் செய்தி வெளியானதும், அமைச்சர் திரு இராகவானந்தம் அவர்கள் ஜெய் நகருக்கு விரைந்து வந்தார். பரபரப்பான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. ராட்சத பம்பு செட்டுகள் வைத்து தேங்கிய நீர் வெளியேற்றப்பட்டது. நீர் முழுமையாக வெளியேற மூன்று நாள் பிடித்தது. பாதிக்கப்பட்ட கிணறுகளிலிருந்தும் தண்ணீர் வெளியேற்றப்பட்டது.

**இது சகித்துக்கொள்ள முடியாத ஒரு சரித்திர நிகழ்வு!**

*'தி ஹிந்து'* நாளிதழில் தொடர்ந்து மூன்று நாட்கள் செய்தி வந்ததாலும், மான்புமிகு அமைச்சர் திரு இராகவானந்தம் அவர்கள் வந்து சென்றதாலும் "ஜெய் நகர்" பெயர் மாநகர் முழுவதும் பரவலாக பேசப்பட்டது. அதன் மூலம் ஜெய் நகருக்கு ஒரு அங்கீகாரம் கிடைத்தது. அதன் பிறகு மாநகராட்சி நிர்வாகமும் மெட்ரோவாட்டர் நிர்வாகமும் ஜெய் நகரில் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ள இசைவு காட்டினர். சிறுக சிறுக ஜெய் நகரில் சில முன்னேற்றங்கள் ஏற்பட்டன. பல தெருக்கள் மேம்படுத்தப்பட்டு தார் சாலை போடுவதற்காக கோப்புகள் நகர்ந்து ஒப்புதலும் பெறப்பட்டு சில வேலைகளும் நடைபெற்றன. பல தெருக்களில் தெரு விளக்குகள் பொறுத்தவும் ஒப்புதல்கள் பெறப்பட்டன. இந்த சந்தர்ப்பத்தில் தான் ஜெய் நகர் குடியிருப்போர் நலச் சங்கம் 1986க்கு பிறகு தொடர்ந்து சீராக செயல்பட முடியாத நிலை ஏற்பட்டது.

நிர்வாகிகளில் பலர் அலுவல் காரணமாகவும், அலுவலக பணிச்சுமை காரணமாகவும், இடம் பெயர்ந்து சென்றதாலும் சங்கப்பணிகளில் சற்று பின்னடைவு ஏற்பட்டது.

## JNDA உதயம்:

காலம்சென்ற திரு முனுசாமி (9வது தெரு) அவர்கள் அதே தெருவில் புதியதாக குடியேறிய திரு P.சந்திரமோஹன் அவர்களின் உதவியோடு குடியிருப்போர் நலச் சங்கத்தை மீண்டும் நல்ல செயல்பாட்டிற்கு கொண்டுவர முயற்சிகளை மேற்கொண்டார். குடியிருப்போர் நலச் சங்க தஸ்தாவேஜுகள் அனைத்தையும் சங்க நிர்வாகிகளின் ஒப்புதலுடன் செயலாளர் திரு N.சிட்டிபாபு அவர்களிடமிருந்து பெற்று திரு P.சந்திரமோஹன் மற்றும் சில நண்பர்களையும் இணைத்துக் கொண்டு செயலாற்ற முன்வந்தார்கள். ஜெய் நகர் குடியிருப்போர் நலச் சங்கத்தின் பெயரிலேயே தொடர்ந்து செயல்படுவதில் சிரமம் ஏற்பட்டதால் புதியதாக ஓர் சங்கத்தை உருவாக்க தேவை ஏற்பட்டது..

அதுவே 1988ல் "ஜெய் நகர் மேம்பாட்டுச் சங்கம்" - **Jai Nagar Develpment Association** என பதிவு செய்யப்பட்டது.

இவ்வாறு உருவானது தான் **JNDA** எனும் **Jai Nagar Development Association**!

**நமது நலச் சங்கம் கண்டுள்ள வேகமான முன்னேற்றங்களில் சில ,,,,,,**

## நற்பணிகள்:

ஜெய் நகரின் அனைத்து தெருக்களும் தார் சாலைகள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டன. அனைத்து தெருக்களில் சோடியம் வேப்பர் தெரு விளக்குகள் பொறுத்தப்பட்டன. உலக வங்கி உதவியுடன் சென்னையில் பெரும்பாலான பகுதிகளுக்கு பாதாள சாக்கடை வசதிக்கு மெட்ரோவாட்டர் நிர்வாகம் திட்டமிட்டபோது அந்த திட்டத்தில் ஜெய் நகர் பகுதியையும் இணைத்துவிட JNDA பெரும் முயற்சியில் ஈடுபட்டு வெற்றிகண்டது. அதே போல் குடிநீர் வசதியும் பெற்றதில் JNDA பங்கு குறிப்பிடத்தக்கது.

**இணைப்புச் சாலை (Link Road):**

100 அடி சாலை கட்டமைக்கப்பட்ட போது 100 அடி சாலையுடன் ஜெய் நகர் இணைக்கப்பட, நமது (வில்லிவாக்கம்) சட்டமன்ற தொகுதி உறுப்பினர் மறைந்த திரு W.R.வரதராசன் அவர்களின் உதவியுடன் நெடுஞ்சாலை துறையிடம் ஒரு இணைப்புச் சாலையை போராடிப் பெற்றதில் JNDA-வின் பணி அலாதியானது.

**மழை-நீர்-வடிகால்வாய்கள்:**

பள்ளமாகவே இருந்து ஒவ்வொரு மழைக்கும் மழை நீர் தேங்கி மக்களை அவதிக்குள்ளாக்கி வந்த அன்றைய துரைப்பிள்ளை நகராக இருந்த பகுதியில் இருந்து அனைத்து தெருக்களும் மேடுயர்த்தப்பட்டு முன்னேற்றியதில் JNDA வின் முயற்சிகள் பாராட்டத்தக்கது.

முதல் பிரதான சாலை, 2ம் பிரதான சாலை, 2வது தெரு, வள்ளுவர் சாலை, 3வது தெரு 4வது தெரு, 5வது தெரு, 6வது தெரு, 7வது தெரு, 8வது தெரு, 10வது தெரு, 13வது தெரு, 15வது தெரு, 21வது தெரு ஆகிய தெருக்களில் மழை-நீர்-வடிகால்வாய்கள் அமைக்கப்பட்டதில் JNDA-வின் முயற்சிகள் குறிப்பிடத்தக்கது. இதனால் பகுதியில் மழைநீர் தேக்கம் பெருமளவுக்கு தடுக்கப்பட்டுள்ளது.

மழை காலங்களில் 100 அடி சாலையில் விழுந்தோடும் மழைநீர் முழுவதும் ஜெய் நகருக்குள் தான் வெள்ளமாக பாய்தோடியது. இந்த மழைநீர் வெள்ளத்தை தடுத்து நிறுத்த நெடுஞ்சாலை துறையுடன் தொடர்ந்து போராடியதில் 100 அடி சாலையில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் இந்த மழைநீர் வெள்ளம் பெருமளவுக்கு தடுக்கப்பட்டது.

**ஆவின் பாலகம்:**

JNDA-வின் தொடர் முயற்சியால் கிடைக்கப்பெற்ற பல வசதிகளில் குறிப்பிடத்தக்க ஒன்று முதல் பிரதான சாலையில் அமைந்துள்ள ***ஆவின் பாலகம்*** ! மாநகராட்சிக்கு சொந்தமான இடம் தெரிவு செய்து கொடுத்ததிலிருந்து கட்டிடம் கட்டி பாலகம் திறக்கப்படும் வரை மேற்கொள்ளப்பட்ட தொடர் முயற்சிகள் பாராட்டத்தக்கவை.

**அழகிய ஜெய் நகர் பூங்காக்கள்:**

அத்தனைக்கும் மேலாக பெரும் அச்சுறுத்தல்களையும் தாங்கி மான்புமிகு துணை முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் மற்றும் வணக்கத்திற்குரிய சென்னை மாநகராட்சி மேயர் திரு மா.சுப்பிரமணியம் ஆகியோரையும் சந்தித்து தொடர்ந்து முயற்சித்ததில் கிடைக்கப்பெற்றது தான் இரண்டு அழகிய ஜெய் நகர் பூங்காக்கள். JNDA-வின் வாழ்நாள் சாதனையாக அமைந்துள்ளன இந்த இரண்டு பூங்காக்கள்.

**வங்கி சேவை:**

வங்கியே இல்லாதிருந்த இப்பகுதியில் சென்னை மத்திய கூட்டுறவு வங்கி (MCC வங்கி) முதலில் நடமாடும் வங்கி ஆகவும் பின்னர் முழுநேர கிளை வங்கியாக துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. தற்போது SBI, Syndicate, HDFC, AXIS ஆகிய வங்கிகள் நம் பகுதியில் செயல்படுகின்றன.

**நுகர் பொருள் விற்பனை அங்காடி:**

ஜெய் நகர் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் மக்கள் தொகை நாளடைவில் பெருகி வந்த நிலையில் தேவையை வலியுறுத்தி விண்ணப்பித்ததால் முதல் பிரதான சாலையில் ஒரு நுகர் பொருள் விற்பனை அங்காடி (ரேஷன் கடை) செயல்பட துவங்கியது. தற்போது அது வள்ளுவர் சாலைக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**மருந்து கடைகள்:**

1980களில் நமது பகுதியில் ஒரு மருந்து கடையும் இல்லை. தற்போது ஜெய் நகரில் மட்டும் ஒன்பது மருந்து கடைகள் செயல்படுகின்றன.

**ஆலயப்பணிகள்:**

திரு T.சுந்தரமூர்த்தி, திரு L.லக்ஷ்மிநாராயணன் ஆகியோரது முயற்சியால் அருள்மிகு ஆதிபராசக்தி திருக்கோவில் 1980களில் பிரதிஷ்டிக்கப்பட்டு வழிப்பட துவங்கியது. அதன் கட்டுமான பணிகள் 1985க்குப்பிறகு திரு S.A.ராமமூர்த்தி உள்ளிட்ட சில நண்பர்களையும் இணைத்துக்கொண்டு துவங்கப்பட்டது. திரு R.கண்ணன் (15வது தெரு) அவர்கள் நெடுஞ்சாலை துறையில் (Highways Department) பணிபுரிந்தவர். அன்றைய தலைமைப் பொறியாளர் நமது பகுதியினை 100' சாலையுடன் சேர்க்கும் நெடுஞ்சாலை துறைக்கு சொந்தமான இடத்தினை 99-ஆண்டுகள் அனுபவபாத்திய ஒப்புதல் மூலம் சென்னை மாநகராட்சிக்கு வழங்கியதில் அவரது விடாமுயற்சியும் ஒரு முக்கிய காரணம். அதே நேரத்தில் அருள்மிகு ஆதிபராசக்தி திருக்கோவில் அமைந்திருக்கும் இடத்திற்கும் சேர்ந்து ஒப்புதல் பெற உதவினார் திரு. R.கண்ணன். திருக்கோவில் இன்று பிரம்மாண்டாக விளங்குவதில் திரு R.கண்ணன் அவர்களின் பங்கும் குறிப்பிட தக்கது.

தொடர்ந்து பணிபுரிவோம் - சாதனை படைப்போம் !

(தொடரும்......)

*சமூக நலக்கூடம், நூலகம், சங்க கட்டிடம், லாரிகளில் குடிநீர் வினியோகம் உள்ளிட்ட மேலும் பல விவரங்கள் குறித்து அடுத்தப்பகுதியில் !*